***DEPOSITION OF WITNESS***
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
- - - - -

# *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 53 / 2021*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 1*** |
| ***Name*** | : | **திரு. துரைராஜ்** |
| ***Father's Husband's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***28.04.2025***

எதிரிகள் *1* முதல் *4* வரை ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மேலூர் தாலுகா, T புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என் மனைவி அழகு 2008ம் ஆண்டு இறந்துவிட்டார். எனக்கு செல்வம் என்ற ஆண் பிள்ளையும், விஜயா என்ற பெண் பிள்ளை உள்ளார்கள். 1 வது எதிரி எனது மருமகன். 2,3 எதிரிகள் 1 வது எதிரியின் பெற்றோர்கள். 4 வது எதிரி மீனாள், 1 வது எதிரியின் அண்ணன் மனைவி ஆவார். என் மகள் விஜயாவை 1 வது எதிரிக்கு திருமணம் செய்த கொடுத்திருந்தோம். அவர்களுக்கு ஒரு பெண் ஒரு ஆண் குழந்தை உள்ளார்கள். என் மகள் விஜயாவும், பேத்தி பிரியதர்ஷினியும் எதற்காக மண்ணெண்ணெய் ஊற்றி இறந்துவிட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் மேலூருக்கு வேலைக்குச் சென்றுவிட்டேன். என் மகள் விஜயாவிற்கு 1 வது எதிரிக்கு 8 ½ பவுன் நகை போட்டு, பண்ட பாத்திர சீர் வரிசைகள் கொடுத்து திருமணம் செய்து கொடுத்தோம். என் மகள்

திருமணத்திற்குப் பின்னர் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தாள். என் மகளுக்கு பிரியதர்ஷினி என்ற மகளும், யாசித் என்ற மகனும் உள்ளார்கள். என் மகளுக்கு அடிக்கடி வயிற்று வலி வந்து கொண்டிருந்தது. என்னிடம் சொன்னார். நானும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். 26.03.2012 ம் தேதி நான் வழக்கம் போல, நான் எலக்ட்ரீசியன் வேலைக்கு மேலூருக்கு வந்துவிட்டேன். அப்போது என் மகள் தீ வைத்துக் கொண்டதாக போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் மேலூரில் இருந்து என் மகளைப் பார்க்க போய்க்கொண்டிருந்த போதே ஆம்புலன்சில் என் மகளைக் கொண்டு வந்தார்கள். ஆம்புலன்சில் நானும் என் மகளுடன் சென்றேன். என் மகளும் பேத்தியும் பேசினார்கள். என் மகளின் கேட்டபோது, வயிற்று வலி அதிகமாக இருந்ததால் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டதாகவும் அதைப் பார்த்து என் பேத்தி காப்பாற்றச் சென்றதில் என் பேத்திக்கும் தீக்காயம் ஏற்பட்டதாகச் சொன்னாள். மேலூர் அரசு மருத்துவமனையில் இருந்து, மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு மேல் சிகிச்சைக்கு கொண்டு செல்லச் சொன்னார்கள். 26.03.2012 ம் தேதி என் பேத்தி சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார். மறுநாள் 27.03.2012 ம் தேதி என் பேத்தி இறந்துவிட்டதாக காவல் நிலையத்தில் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை யார் எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றும் எனக்குத் தெரியாது. **புகார் மனுவில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அதசாஆ.1 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, 1 வது எதிரி, அவரது அண்ணன் மனைவியான 4 வது எதிரியை வைத்துக் கொண்டு, அடிக்கடி குடித்துவிட்டு வந்து, என் மகளை அடித்துத் துன்புறுத்தியதாகவும், அப்போதெல்லாம் என் மகள் கோவித்துக் கொண்டு, என் வீட்டிற்கு வந்துவிடும் என்றும், அப்போதெல்லாம் நான் சமாதானம் செய்து என் மகளை அவள் வீட்டில் விட்டுவிட்டு வருவேன் என்றும் என் மகளை ஆஜர் 4 எதிரிகளும் பணம், நகை வாங்கி வரும்படி கொடுமைப்படுத்தி வந்ததாகவும், 26.03.2012 ம் தேதி காலை 08.00 மணி போல, என் மருமகன் 1 வது எதிரி, என் மகளிடம், தோடு, மூக்குத்தி, தாலியைக் கழட்டித் தரும்படி கேட்டதாகவும், என் மகள் மறுத்ததால், என் மகளை அடித்ததோடு, நான் மேலூர் போய்விட்டு வருவதற்குள், நீ செத்துப் போயிடு என்று சொல்லிவிட்டு சென்றதாகவும், இதை என் மகள் எனக்கு போன் மூலம் தகவல் சொல்லி அழுததாகவும், பின்னர் எனது நண்பர் பாட்டையா என்பவர் என் மகளும், என் பேத்தி பிரியதர்ஷினியும் தீக்காயம் பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம், மேலூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு போயிருப்பதாகத் தகவல் சொன்னார் என்றும் நான் மருத்துவமனைக்குச் சென்று இருவரையும் பார்த்த போது, உடல் முழுவதும் தீக்காயங்கள் இருந்ததாகவும், மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்குக் கொண்டு போய் சேர்த்ததாகவும், என் பேத்தி அன்று இரவு 11.30 மணிக்கு இறந்துவிட்டதாகவும், மறுநாள் காலையில் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், மதுரை ஆஸ்பத்திரியில் இருந்த என் மகளை விசாரித்த போது, மேலூர் போய்விட்டு வீட்டிற்கு வந்த 1 வது எதிரி, ஏன்டீ இன்னும் சாகலையா என்று சொல்லி, என் மகளையும், பேத்தியையும் கட்டிப் போட்டு மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துவிட்டுச் சென்றதாகச் சொன்னார் என்றும் அதற்கு மறுநாள் என் மகள் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுடன் சமாதானமாகப் போய்விட்டேன் என்றும் அதனால்

எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

புகாரினை யார் எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது என்றும் அதில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் பற்றி எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை